**07.09.2020**

**பத்திரிக்கைச் செய்தி**

விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து வண்ணாரப்பேட்டை வரை செல்லும் நீல வழித்தடத்திலான சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் இன்று (07.09.2020) காலை 07.00 மணி முதல் துவங்கியது. இன்று காலை 07.00 மணிக்கு விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து வண்ணாரப்பேட்டை புறப்பட்ட முதல் மெட்ரோ இரயிலில் மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. எம். சி. சம்பத் அவர்கள், விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து நந்தனம் மெட்ரோ இரயில் நிலையம் வரை பயணம் செய்தார்.

பயணத்தின் போது சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் கொரோனா தொற்று பரவாமலிருக்க எடுத்துள்ள பல்வேறு முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மெட்ரோ இரயில் நிறுவன அலுவலர்கள் மற்றும் பயணிகளிடம் கேட்டறிந்தார். மேலும் திறன் அட்டை (Smart Card), க்யுஆர் குறியீடு (QR Code) செயல்பாடு, பயண அட்டை சான்று அளிக்கும் இயந்திரம் (Travel Card Reader) செயல்பாடு ஆகியவை குறித்தும் பயணிகளிடம் கேட்டறிந்தார்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ் இ.ஆ.ப., இயக்குநர் (திட்டம்) மற்றும் (இயக்கம் மற்றும் பராமரிப்பு) திரு. நாராயண் திவேதி மற்றும் உயர் அலுவலர்கள் உடன் பயணித்தார்கள்.

இன்று (07.09.2020) காலை 07.00 மணி முதல் விமான நிலைய மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து நந்தனம், எல்.ஐ.சி வழியாக வண்ணாரப்பேட்டை செல்லும் நீல வழித்தடத்தில் மெட்ரோ இரயில் சேவை துவங்கியது.

வருகின்ற 09.09.2020 (புதன்கிழமை) காலை 7 மணி முதல் பரங்கிமலை மெட்ரோ நிலையத்திலிருந்து கோயம்பேடு வழியாக புரட்சித்தலைவர் டாக்டர். எம். ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ செல்லும் பச்சை வழித்தடத்தில் மெட்ரோ இரயில் சேவை துவங்குகிறது.

தினந்தோறும் காலை 07.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை மெட்ரோ இரயில்கள் இயக்கப்படும். உச்ச நேரங்களில் (Peak Hours) (காலை: 08.30 மணி முதல் 10.30 மணி வரை மற்றும் மாலை: 05.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை) 5 நிமிட இடைவெளியிலும் மற்ற நேரங்களில் 10 நிமிட இடைவெளியிலும் மெட்ரோ இரயில்கள் இயக்கப்படும்.